புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • பிப்ரவரி(February), 19 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 7 • விலை(PRICE) ரூ.6.00

## கழகத் தலைமைக்குழு முடிவு

# திமுக கூட்டணியை ஆதரித்து 1,000 பரப்புரைக் கூட்டங்கள்

**தேர்தல் களத்தில் முழுவீச்சுடன் களமிறங்கி செயல்பட கழகம் முடிவுசெய்துள்ளது “தொடரட்டும் தமிழ்நாட்டில் சாதனைகள்! திமுக ஆட்சியை உறுதி செய்வோம்!” என்றத் தலைப்பில் 1000 பரப்புரைக் கூட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.**

திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமைக் குழுக் கூட்டம் 15.02.2026 ஞாயிறு அன்று சேலம் மேட்டூரில் பிற்பகல் 3:30 மணி அளவில் தொடங்கி நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார்.

தலைமைக் குழு கூட்டத்தில் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத்தின் நிலைப்பாடு, இணையதளச் செயல்பாடுகள், முழக்கம் சந்தா சேர்ப்பு, மாவட்ட நிர்வாகிகள் சந்திப்பு கலந்தாய்வு, கோவையில் நடைபெற்ற தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின் தாக்கங்கள் ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

தலைமைக் குழுவில் கலந்து கொண்ட கழகத் தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் தலைமைக் குழு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்கள் ஆலோசனைகளை விரிவாக எடுத்துக் கூறினார்கள். அனைவரின் கருத்துக்களை விவாதித்து நிறைவாக கீழ்கண்ட முடிவுகள் தலைமைக் குழுவில் எடுக்கப்பட்டன.

### 2026 தேர்தல் நிலைப்பாடு

தமிழ்நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய பாய்ச்சலோடு சமூக மேம்பாட்டு கண்ணோட்டத்தோடு தொலைநோக்குப் பார்வையுடன் இந்திய ஒன்றியத்திற்கே முன்மாதிரியாக வழிகாட்டியாக இருக்கும் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து அவற்றை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருவதோடு மட்டும் அல்லாமல், இந்திய ஒன்றியத்தையே ஒற்றைப் பண்பாடு, கலாச்சாரம், மொழி என அனைத்து நிலைகளிலும் பாசிசத் தன்மையைப் புகுத்தி ஆர்.எஸ்.எஸ்-ன் கனவான இந்து ராஷ்டிரமாக மாற்றத் துடிக்கும் பாஜக அரசிற்கு எதிராக தேர்தல் அரசியல் களத்திலும், தந்தை பெரியாரின் சமூக நீதிக் கொள்கைகளை, அடிப்படை தத்துவங்களைப் பற்றுறுதியுடன் கடைபிடித்து கருத்தியல் தளத்திலும் இந்துத்துவ பாசிச சக்திகளுக்கு எதிராக ஒன்றியத்திலேயே வலிமையான கட்சியாக விளங்கி பெரும்பான்மையான மக்கள் துணையோடு ஆட்சி புரியும் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசுக்கு வரும் 2026 தேர்தலில் முழு ஆதரவு அளிப்பது என தலைமைக் குழுவில் ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

இதனை ஒட்டி வரும் 2026 சட்டமன்றத் தேர்தலை மனதில் கொண்டு திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 1000 தெருமுனை கூட்டங்கள் மற்றும் துண்டறிக்கைகள் வாயிலாக இக்கருத்துகளை மக்கள் மன்றத்தின் முன் எடுத்துச் செல்வது என்றும் முடிவு செய்யப்பட்டது.



### இணையதள செயல்பாடுகள்

நவீன விஞ்ஞான வளர்ச்சியின் விளைவாக தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டிருக்கும் மிகப் பெரிய மாற்றங்களினால் கருத்துப் பரப்பல் மூலம் கருத்துருவாக்கம் செய்வதிலும், செய்திகளைப் பரவலாக மக்களிடம் கொண்டு போய் சேர்ப்பதிலும் இணையதளம் இன்றியமையாத ஒரு முக்கிய இடத்தை எட்டி இருக்கிறது என்பதால் இணையதள செயல்பாடுகளை இன்னும் வீச்சுடன் முன்னெடுப்பது என தீர்மானிக்கப்பட்டது. அதற்கான செயல்பாடுகளாக புதிய புதிய யுக்திகளோடு வளர்ந்து வரும் தகவல் தொழில்நுட்ப மாற்றத்தின் அடிப்படையில் இணையதளத்தில் ஆர்வமுள்ள கழகத் தோழர்களை ஒருங்கிணைத்து அந்தப் பணிகளைத் தீவிரப்படுத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

### மாவட்டக் கழக நிர்வாகிகள் சந்திப்பு

தலைமைக் குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகளை அந்தந்த மாவட்டங்களுக்கு நேரில் சென்று சந்தித்து மாவட்ட ஆலோசனைக் கூட்டங்களை நடத்துவது,அதன் மூலம் இயக்கப் பணிகளை இன்னும் வேகமாக முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

### டிசம்பர் 29 கோவை ஆர்ப்பாட்டத்தின் தாக்கங்கள்:

திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு வடிவங்களில் தீண்டாமை கடைபிடிக்கப்படுவதைக் கண்டறிந்து அதனை ஆவணப்படுத்தி சான்றுகள் ஆவணங்களுடன் தலைமைக்கு அனுப்பும்படி கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டதன் அடிப்படையில் கோவை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் கடைபிடிக்கப்படும் தீண்டாமை வடிவங்கள் குறித்து கோவை மாவட்டக் கழகத் தோழர்கள் அனுப்பிய செய்திகள், காணொளிகள் அடிப்படையில் தீண்டாமை கடைபிடிக்கப்படும் அந்தந்த பகுதிகளில் அரசின் நடவடிக்கைகளை வலியுறுத்தி டிச-29 அன்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்குப் பிறகு அதன் தாக்கங்கள் குறித்து தலைமைக் குழுவில் விவாதிக்கப்பட்டது. மிகப்பெரிய எழுச்சியுடன் நடைபெற்ற அந்தப் போராட்டத்திற்கு பிறகு தீண்டாமை வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை வெளியில் சொல்ல முடியாத அளவிற்கு அச்சத்துடன் இருந்த நிலை மாறி அவர்கள் வெளியில் வந்து தங்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை சொல்வதற்கு இந்த ஆர்ப்பாட்டம் அவர்களுக்கு மன வலிமையை கொடுத்து இருக்கிறது என்கின்ற செய்தியை தோழர்கள் பகிர்ந்து கொண்டார்கள். ஏற்கனவே இதற்கு முன்பு கழகத்தின் சார்பில் ஜாதித் தீண்டாமைக்கு எதிராக இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டம் நடத்திய பகுதிகளில் இன்றளவும் இரட்டைக் குவளை முறை நடைமுறையில் இல்லாத நிலையை தோழர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வகையில் டிசம்பர் 29, 2025 கோவை போராட்டம் காரணமாக தீண்டாமை கடைபிடிக்கப்பட்ட தேநீர்க் கடை மூடப்பட்டதையும் மக்கள் பயத்தை தயக்கத்தை உடைத்து தங்களுக்கு இழைக்கப்படும் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து வெளியில் வந்து பேசுவதற்கு கழகத்தின் போராட்டம் தூண்டுகோலாக அமைந்திருப்பது நல்லதொரு முன்னேற்றமாக இருந்ததை தோழர்கள் குறிப்பிட்டனர். இன்னும் தொடர்ந்து பரப்புரைகள், போராட்டங்கள் வாயிலாக தீண்டாமைக்கு எதிராக கழகம் தொடர்ந்து களத்தில் பணியாற்றும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

### முழக்கம் சந்தா சேர்க்கை

கழகத்தின் வார ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் இதழின் சந்தாக்களை அதிகப்படுத்து குறித்தும் முழக்கம் சந்தாதாரர்களுக்கு மிகச் சரியாக சென்று சேர்வதை உறுதிப்படுத்த மாவட்டக் கழக நிர்வாகிகளிடம் ஆலோசிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது. மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள நூலகங்களில் புரட்சிப் பெரியார் முழக்கம் இடம்பெறுவதற்கு தமிழ்நாடு அரசு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து இருப்பதும் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் நூலகங்களில் முழக்கம் இடம்பெறுவதையும் குறிப்பிட்டு மேலும் அந்தந்த மாவட்ட கழக பகுதிகளில் உள்ள அரசு நூலகங்களில் பெரியார் முழக்கம் இதழ் இடம் பெறுவதை உறுதி செய்து அவ்வாறு இடம் பெறவில்லை எனில் மாவட்டக் கழக நிர்வாகிகள் நூலக பொறுப்பாளர்களை சந்தித்து முழக்கம் நூலகங்களில் இடம்பெற ஆவண செய்யும்படி கேட்டுக் கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

**புதிய தலைமைக் குழு உறுப்பினராக வேலூர் சிவா இணைக்கப்பட்டுள்ளார்.**

நிறைவாக கழகப் பொதுச்செயலாளர் தலைவர் அவர்களின் ஆலோசனைகளுடன் தலைமைக் குழு நிறைவடைந்தது. இத்தலைமைக் குழுக் கூட்டத்தில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் ஈரோடு ரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, சமூக வலைதளப் பொறுப்பாளர் பரிமளராசன், அன்பு தனசேகரன், சென்னை உமாபதி, மேட்டூர் சக்திவேல், கோவிந்தராஜ், காவலாண்டியூர் ஈஸ்வரன், மயிலாடுதுறை இளையராஜா, அய்யனார், சூலூர் பன்னீர்செல்வம், நிர்மல்குமார், பேராவூரணி திருவேங்கடம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வள்ளலாரின் ஜாதி–மத எதிர்ப்புக் கருத்துக்களை நூலாக வெளியிட்டவர் பெரியார்– தமிழக முதலமைச்சர்

சென்னையில் கடந்த பிப்-15 அன்று இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ‘அனைத்துலக வள்ளலார் மாநாட்டைத் தொடங்கி வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் ஆற்றிய உரையிலிருந்து...

இந்தச் சமூகத்தில், இறுகிப் போயிருந்த பழமைவாதங்களையும், மூடத்தனங்களையும் சாடியவர் அவர். சாதி, சமய வேறுபாடுகள் இல்லாத சமூகத்தைக் கட்டமைக்க வேண்டும் என்ற அவருடைய பெருங்கனவுதான் திராவிட இயக்கத்தின் உயிர் மூச்சுக் கொள்கை. அதனால்தான், திராவிட இயக்கம் உருவானதில் இருந்து, தொடர்ந்து வள்ளலாரை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். ஆறாம் திருமுறை பாடல்களைத் தொகுத்து, ‘இராமலிங்கர் பாடல் திரட்டு’ என்ற நூலை 1929-ல் வெளியிட்டவர், தந்தை பெரியார்.

இன்னும் ஒருபடி மேலே சென்று, தமிழர்கள் முன்பு, பெரியார் ஒரு கேள்வியை முன்வைத்தார். தந்தை பெரியார் என்ன கேட்டார் தெரியுமா? “வட நாட்டு சாமியார்களைப் போற்றும் தமிழனே, வடலூர் வள்ளலார் எந்த விதத்தில் தாழ்ந்தவர்?” என்று கேட்டார். இதையெல்லாம் உணர்ந்துதான், “வள்ளலாரின் கொள்கைகளை சமுதாயக் களத்தில், பெரியார் பரப்புரை செய்தார்” என்று தவத்திரு குன்றக்குடி அடிகளாரே சொல்லியிருக்கிறார். அந்த வழியில் தான் சமத்துவத்தையும், சமூகநீதியையும் நிலை நாட்டுகின்ற நம்முடைய அரசு- எங்களுடைய கோட்பாடு “எல்லார்க்கும் எல்லாம்” என்ற அவருடைய சிந்தனையின் செயல் வடிவம் தான். இங்கே கூடியிருக்கும் அன்பர்கள் எல்லோரிடத்திலும் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, வள்ளலாரைப் போற்றுவதோடு, நம்முடைய பணி நின்றுவிடக் கூடாது; அவருடைய நோக்கங்களை மக்கள் முழுமையாக உணர்ந்து, கடைப்பிடிக்க பாடுபட வேண்டும்.



அதற்கு இந்த மாநாடு வழி வகுக்கவேண்டும். ஏனென்றால், நம்முடைய பண்பாட்டு அடையாளங்களுக்கு வேறு வர்ணம் பூச நினைக்கிறார்கள், வள்ளலாரின் நோக்கங்களை சிதைத்திட நாம் அனுமதிக்க கூடாது. பிரிவினைச் சக்திகளுக்கு ஒருபோதும் இடம் கொடுக்காமல், அன்பும்-பண்பும்-அறனும்-கருணையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்க உழைப்போம்.

தலையங்கம்

# தமிழ்நாட்டு அணியா? டெல்லி அணியா?

“இப்போது நடக்கும் தேர்தல் தமிழ்நாட்டு அணிக்கும் டெல்லி அணிக்கும் நடக்கும் தேர்தல்” என்று தெளிவாக அறிவித்துவிட்டார், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். தமிழ்நாடு சுயமரியாதைக்கும் தன்னாட்சிக்கும் களத்தில் இருக்கிறது. எதிரணியில் இரண்டு கட்சிகள் இருக்கின்றன. ஒன்று பாஜகவின் உரிமை பறிப்புகளை தமிழ்நாட்டின் மீதான வஞ்சகத்தை எதிர்க்காமல் அமித் ஷாவின் ஆணைகளின் கீழ் இயங்கும் எடப்பாடி அணி. மற்றொன்று தமிழ்நாட்டை வஞ்சித்தாலும்"ஜனநாயக" மிரட்டல்களை திணித்தாலும் பாஜகவை எதிர்த்து வாய் திறக்க மாட்டோம் என மவுன விரதம் இருக்கும் விஜய் கட்சியின் அணி.

இந்த இரண்டு அணிகளுக்குமே திமுக ஆட்சி நடத்தி வரும் தத்துவார்த்த சுயமரியாதை, தன்னாட்சி உரிமைப் போராட்டத்தை முடக்கி இந்துத்துவ அரசியலிடம் சரணாகதி அடையச் செய்வது தான் நோக்கம். முதலமைச்சர் பதவி என்பதைத் தவிர தங்களுக்கு வேறு எந்த லட்சியமும் கொள்கையும் கிடையாது என்பதில் உறுதியாக இருப்பவர்கள் தான். தமிழ்நாடு அரசைப் போலவே ஒன்றிய ஆட்சிக்கு எதிரான தத்துவப் போராட்டத்தை தீவிரமாக முன்னெடுத்து வருகிறார் ராகுல் காந்தி; ஆர்.எஸ்.எஸ் தத்துவத்தை எதிர்த்து உறுதியாக உயிரைப் பணயம் வைத்து அவர் களத்தில் நிற்கிறார்.

சொல்லப்போனால் அவரது காங்கிரஸ் கட்சியின் பெரும்பாலான தலைவர்கள் ஏற்றுக் கொள்ளாத சிந்தனை இது; சொந்த கட்சிக்குள் நிலவும் மதவாத உணர்வுகளுக்கு எதிராகவே ராகுல் காந்தியின் இந்த லட்சியப் போராட்டம் நடக்கிறது. இதற்காகவே பல ஆண்டுகள் அவர் காங்கிரஸ் கட்சித் தலைமையை ஏற்கத் தயங்கினார். இதில் திமுகவும் ராகுல் காந்தியும் ஒரே நேர்கோட்டில் இணைந்து நிற்பதால் தான் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் ராகுல் காந்தியும் தத்துவார்த்த சகோதரர்களாக கைகுலுக்கிக்கொண்டு இருக்கிறார்கள்; இதைத்தான் தமிழ்நாடு முதலமைச்சர் கட்சிகளுக்கும் அப்பாற்பட்டு எங்கள் உறவு நீடிக்கிறது என்று கூறியிருக்கிறார்.

ஒன்றிய ஆட்சியினால் ராகுல் நாடாளுமன்ற பதவி பறிக்கப்பட்ட போதும்; நீதிமன்றம் வழியாக சிறைத்தண்டனை வழங்கப்பட்டபோதும்; நாடாளுமன்ற திமுக அணி ராகுல் பக்கம் உறுதியாக நின்றது. நாடாளுமன்றத்தில் பாஜக ஆட்சியின் மெஜாரிட்டி எண்ணிக்கையைத் தடுத்து நிறுத்தியதும் தமிழ்நாடு தான். ஒரு இடத்தைக் கூட தமிழ்நாட்டில் பாஜகவால் வென்று காட்ட முடியவில்லை போட்டியிட்ட அத்தனை காங்கிரஸ் வேட்பாளர்களையும் நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தது திமுக கூட்டணி தான். சொந்தக் கட்சிகளை விட லட்சியமே பெரிது என்ற உயர்ந்த நோக்கில் நடை போடுகிறார் ராகுல் காந்தி. ஆனால் இதற்கு குழி தோன்றுகின்ற வகையில் தமிழ்நாட்டில் காங்கிரஸில் சில கலகக் குரல்கள் கேட்கின்றன. எங்களை அமைச்சராக்கினால் தான் கூட்டணி என்கிறார்கள். வெளிநாடுகளில் உயர்ந்த பதவிகளை வகித்துவிட்டு பிறகு காங்கிரஸ் கட்சியில் அதிகார மையத்தில் நுழைந்த பிரவீன் சக்கரவர்த்தி என்ற பார்ப்பனர். இந்த கலகத்தைத் துவக்கி வைத்தார்.

த.வெ.க தலைவர் விஜய்யுடன் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிக்குத் தெரியாமலேயே பேச்சுவார்த்தைகளை நடத்தினார் ;தனக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சிக்குள் சில நபர்களையும் பிடித்துக் கொண்டார்; கட்சிகளை விட லட்சியங்களே பெரிது என்ற ராகுல் காந்தியின் நோக்கத்திற்கு இழைக்கும் மாபெரும் துரோகம் இது! ஈரோட்டில் இரண்டு முறை இடைத்தேர்தல்கள் வந்த போதும் காங்கிரஸ் வேட்பாளர்களையே போட்டியிடச் செய்து மகத்தான வெற்றியைத் தேடித் தந்தது திமுக தான். தமிழ்நாட்டில் கூட்டணி ஆட்சி ஒத்து வராது என்று தமிழக முதலமைச்சர் ஏன் கூறுகிறார்? என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திராவிட இயக்க லட்சியங்களோடு பயணிப்பது திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் கொள்கை பார்வையில் தான் ஆட்சியின் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அகில இந்திய கட்சியான காங்கிரஸ் கட்சி மாநில உரிமைகளுக்காகப் போராடும் ஓர்அமைச்சர் அவையில் எப்படி இடம்பெற முடியும்? அப்படி இடம் பெற்றால் அது பதவிகளுக்கான அமைச்சரவையாக இருக்க முடியுமே தவிர கொள்கைக்கான அமைச்சரவையாக இருக்கவே முடியாது; குழப்பங்கள் தான் உருவாகும். கூட்டணி அமைச்சரவையின் குழப்பங்களையும் அமைச்சர்கள் விலைபோவதையும் நாடு பார்த்து வருகிறது.

காங்கிரஸ் அமைச்சர்களே விலை போய் இப்போது மத்திய அமைச்சர்களாக ஆகிவிட்டார்கள். அண்டை மாநிலமான கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சிக்குள்ளயே முதலமைச்சர் பதவிக்கு போட்டி நடந்து கொண்டிருக்கிறது. இத்தகைய அரசியல் அவலங்களைச் சந்திக்காத ஒரே மாநிலமாக தமிழ்நாடு. தனித்துவமாக பயணிக்கிறது. எனவேதான் கூட்டணி ஆட்சி. தமிழ்நாட்டிற்கு ஒத்து வராது என்று முதலமைச்சர் கூறுகிறார். அமைச்சர் பதவி தராவிட்டால் திமுக அணியில் இருந்து விலகி அவர்கள் விரும்புகிற "அமித்ஷா எதிர்ப்பு மவுன" அணியில் சேர்ந்தாலும் அது லட்சியத் துரோகம்தான் அமித் ஷா அணிக்கு மறைமுக ஆதரவு தான்: இதுவும் முதலமைச்சர் கூறும் டெல்லி அணி தான்."

இது தமிழ்நாட்டின் உரிமைக்களம்!
வெல்லப் போவது தமிழ்நாடு தான்!

# ‘வந்தே மாதரம்’ தேசபக்தி பாடலா? மத பக்தி பாடலா?

*வந்தே மாதரம் பாடலை அரசு நிகழ்ச்சிகளில் கட்டாயமாக்கி இந்துத்துவ பாஜக ஆட்சி உத்தரவிட்டுள்ளது. இந்தியாவை ‘இந்து’ கடவுள்களின் பூமியாக சித்தரிக்கும் பாடலை கட்டாயமாக்கி இது ‘இந்துக்கள்’ நாடு என்று காட்டி வெறுப்பு அரசியலை வெளிப்படுத்தும் ஆணை இது. வங்காளத்தில் பக்கிம் சந்திர சட்டர்ஜி என்றப் பார்ப்பனர் எழுதிய ‘ஆனந்த மடம்’ என்ற நாவலின் இடம்பெற்றுள்ள பாடல் இது. இந்தப் பாடல் சுதந்திரப் போராட்டக் காலத்தில் பாடப்பட்டது. இதை தேசிய கீதமாக மாற்ற வேண்டும் என்று பார்ப்பனர்கள் விரும்பினார்கள். 1937-இல் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் பாடலின் முதல் இரண்டு பகுதிகளை மட்டும் பாடலாக வைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. மற்ற நான்கு பகுதிகள் ‘இந்து’ மதத்தோடு நாட்டை இணைப்பதால் அந்த பகுதிகள் வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த மாநாட்டில் ராஜேந்திர பிரசாத், வல்லபாய் பட்டேல், காந்தி ஆகியோர் பங்கேற்றனர்.*

*துர்கா, லட்சுமி, சரஸ்வதி பெண் கடவுள்களின் பூமி நமது நாடு என்றும், கரங்களில் 10 விரல்களில் ஆயுதங்களை ஏந்தி துர்கா தேசத்தை வீரத்துடன் காப்பாற்றுகிறார் என்றும் பாடல் வரிகள் வருகின்றன. முஸ்லிம், கிறிஸ்தவர், புத்தர், சீக்கியர், நாத்திகர்கள் வாழும் நாட்டில் ‘இந்து’ பெண் கடவுள்களை கட்டாயப்படுத்தி ஏற்கவைப்பதும், அதை தேசபக்தியோடு இணைப்பதும் ஏற்கத்தக்கது அல்ல என்று எதிர்ப்புகள் வந்தன. சனவரி 24, 1950-ல் குடியரசுத் தலைவராக இருந்த ராஜேந்திர பிரசாத் “ஜன கண மன” தேசிய கீதம் என்றும் அதேபோல் அதற்கு சமமாக 'வந்தே மாதரத்தையும்' ஏற்க வேண்டும் என்றும் அறிவித்தார். அரசியல் நிர்ணய சபை வந்தே மாதரம் பாடலின் முதல் இரண்டு பகுதிகளை மட்டும் ஏற்றது. ஏனைய பகுதிகளை ஏற்க மறுத்துவிட்டது. அரசியல் சட்டத்தின் 51(ஏ) பிரிவு; தேசிய கொடியையும், ‘ஜன கண மன’ தேசிய கீதத்தையும் மட்டுமே அங்கீகரித்தது. வந்தே மாதரத்தைக் கட்டாயமாக்கவில்லை.*

*1976 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 42 ஆவது சட்டத் திருத்தத்திலும் இது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. தேசியப் பாடலாக கூறப்பட்ட வந்தே மாதரம் பற்றி இந்த சட்டத் திருத்தத்தில் குறிப்பிடப்படவே இல்லை. தேசிய சின்ன அவமதிப்பு பட்டியலில் வந்தே மாதரம் கிடையாது. இப்போது இந்தியா என்பது இந்து கடவுள்களின் தேசம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்காவிட்டால் தேச அவமதிப்புக் குற்றம் என்று ஒன்றிய ஆட்சி உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாட்டின் அரசு பாடலாக ‘நீராடும் கடலுடுத்த’ என்ற தமிழ் வாழ்த்து பாடல் ஏற்கப்பட்டு அதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அரசு ஆணையும் பிறப்பித்துள்ளார். ஆளுநர் ரவியும், சங்கராச்சாரி பார்ப்பனர்களும் தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்தக் காரணத்தினால் முதலமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்தார். இது ‘மொழி வாழ்த்து’ ‘கடவுள் வாழ்த்து அல்ல!’ ஆனால் தேசபக்தியை இந்து மதத்துடன் இணைத்து அதற்கு சட்ட அங்கீகாரம் வழங்குவது மதச்சார்பின்மை மீது விழுந்த மரண அடி!*

# ஆர்.எஸ்.எஸ்க்காரர்கள் மீது பாலியல் புகார்கள் வருவது ஏன்?

## எஸ்.வி.சேகர் விளக்குகிறார்!

பாஜகவின் தமிழ்நாடு அமைப்புச் செயலாளராக இருந்த கேசவ விநாயகம் மீதான பெண்கள் தொடர்பாக ஏராளமானப் புகார்கள் உண்டு என்று நடிகர் எஸ்.வி.சேகர் கூறியுள்ளார். ஆர்.எஸ்.எஸ்க்காரர்கள் மீதான பாலியல் புகார்கள் வருவதற்கான காரணத்தையும் அவர் கூறியுள்ளார். இது குறித்து ‘தினகரன்’ நாளேட்டுக்கு பிப்-14, 2026 அன்று அவர் அளித்த பேட்டி..

**கேசவ விநாயகத்தை பாஜவின் அமைப்புச் செயலாளர் பொறுப்பில் இருந்து நீக்கியதை எப்படி பார்க்கிறீர்கள்?**

கேசவ விநாயகம் 2016ம் ஆண்டே நீக்கப்பட வேண்டும் என நான் சொல்லிக் கொண்டு இருந்தேன். இன்றைக்குக் கூட ஆர்.எஸ்.எஸ்-சில் முக்கியமானது தனிமனித ஒழுக்கம் எனச் சொல்லியுள்ளார்கள். அது நிறையப் பேருக்கு இருப்பது போன்றே தெரியவில்லை. 5 ஆண்டுகளுக்கு முன்பே 163 பேர் புகார் கொடுத்துள்ளனர். ஆர்.எஸ்.எஸ்-சில் உள்ளவர்கள் ஆண்களுடனே பழகியதால், மாறுபட்ட பாலினத்தைப் பார்க்கும்போது பிரச்னை வந்து விடுகிறது. இன்றைக்காவது கேசவ விநாயகத்தை நீக்கியுள்ளதைப் பார்க்கும் போது அங்குள்ள நிறையப் பெண்கள் சந்தோஷப்படுவார்கள். பாஜவினர் தமிழ்நாட்டில் பெண்களுக்குப் பாதுகாப்பில்லை எனச் சொல்லும் போது, தமிழ்நாட்டு பாஜவில் தான் பாதுகாப்பில்லை என நிறையப் பெண்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது கொஞ்சம் பாதுகாப்பு வருவதற்கு வாய்ப்புள்ளது.

# காதலர் தினத்தில் ஜாதிமறுப்பு மணவிழா



*கோவை மாவட்டம், வடவள்ளி பகுதியைச் சார்ந்த ராஜேந்திரன் - ஜானகி ஆகியோரின் மகள் விவேகா அவர்களுக்கு, கோவை மாவட்டம், கோவில்பாளையம் பகுதியைச் சார்ந்த சிவகாமி - தமிழ்செல்வி ஆகியோரின் மகன் மோகனகிருஷ்ணன் அவர்களுக்கும் சுயமரியாதை இணையேற்பு விழா 14.02.2026 சனிக்கிழமை (அன்பின் நாளான காதலர் தினத்தன்று) மாலை 6 மணி அளவில் கோவை மாவட்டம், குன்னத்தூர் பகுதியில் உள்ள ஸ்ரீ பழனியாண்டவர் கலையரங்கத்தில் நடைபெற்றது.*

*கழகப் பொருளாளர் துரைசாமி, பால் பிரபாகரன் (கழக பரப்புரைச் செயலாளர்), ஆசிரியர் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்ற தலைவர் ), சூலூர்.தமிழ்செல்வி (கோவை மாவட்ட அமைப்பாளர்), வெங்கட் (கோவை மாநகரச் செயலாளர் ) ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி மணமக்களுக்கு வாழ்க்கை துணைநல ஒப்பந்தம் செய்து வைத்து வாழ்த்துரையாற்றினார்.*

**கோவை மாவட்டக் கழகம் வழிகாட்டுகிறது**

***கோவை மாவட்டக் கழகம் சார்பில் 2026 ஆம் ஆண்டு புரட்சிப் பெரியார் முழக்கம் சந்தா முதல் தவணையாக சதிஷ், பொங்கலூர் கார்த்தி, ஸ்டாலின் ராஜா ஆகிய தோழர்கள் ரூ30,000 கழகத் தலைவரிடம் வழங்கினார்கள்.***

***மணமக்கள் கோவை மாவட்டம் இந்த ஆண்டு நடத்த இருக்கும் பயிலரங்கத்திற்காக ரூ15,000 நன்கொடை வழங்கினர்.***

*மணமக்கள் நன்றியுரையாற்றினர். கோவை, திருப்பூர் மாவட்டத்தைச் சார்ந்த கழகத் தோழர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்துக்கொண்டனர்.*

# ஈரோடு-விருதுநகர் சுயமரியாதை மாநாடுகளில் ஜீவாவின் பங்கு என்ன?

### ஜீவாவின் பெரியார் மீதான விமர்சனம் 13 -கொளத்தூர் மணி

தோழர் ஜீவா அவர்களின் வரலாற்று வரலாற்றாளர்களான தோழர்கள் இஸ்மத் பாஷா, கே.பாலதண்டாயுதம் ஆகியோரே ஜீவாவுடன் நேரடியாக பழகி உரையாடி அவரது வாழ்க்கை நிகழ்வுகளை அறிந்து கொள்ளும் வாய்ப்புடையவர்கள் என்பதாலேயே அவர்களது நூல்களை முதன்மை ஆவணமாகக் கொண்டு எழுதி வருகிறோம்.

அந்நூல்களில் சுயமரியாதை மாநாடுகளில் ஜீவா நிகழ்த்திய வீரதீர செயல்பாடுகள் குறித்து அந்நூல்களில் விதந்தோதப்பட்டுள்ள செய்திகளைப் பார்ப்போம்.

தோழர் இஸ்மத் பாஷாவின் நூலின் 23ஆம் பக்கத்தில் "சென்னையில் போலீஸ் அடக்குமுறை எல்லையை மீறி விட்டது; தொண்டர்கள் அடித்து வீழ்த்தப்பட்டார்கள். ஆறு போல் இரத்தம் ஓடிற்று. அச்சமயத்தில் ஈரோட்டில் சுயமரியாதை மகாநாடு கூடிற்று. போலீஸ் அடக்கு முறையை வன்மையாகக் கண்டித்து ஒரு தீர்மானம் விஷயலோசனைக் கமிட்டியில் வந்தது. ஜீவா அதை ஆதரித்து உணர்ச்சித் ததும்பப் பேசினார். ஜாதி மத விவகாரங்களில் மட்டும் நம் சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொண்டால் போதாது; அரசியல் விவகாரங்களிலும் நம் சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி எல்லோருடைய சுயமரியாதை உணர்ச்சியைத் தட்டி எழுப்பினர்" என்று காணப்படுகிறது.

**சுயமரியாதை இயக்க மாநாடுகளில் ஜீவா மட்டுமே 'வீரத்தீரமாக' கம்பு சுற்றியதாக எழுதப்பட்டுள்ள கற்பனை வரலாறுகளுக்கு மறுப்பு!**

தோழர் பாலதண்டாயுதம் நூலிலும் 38ஆம் பக்கத்தில் "அடக்கு முறையோ எல்லை மீறிக் கொண்டிருந்தது; தொண்டர்கள் அடித்து வீழ்த்தப்பட்டார்கள்; சிறையும் சித்திரவதையுமாக ஆதிக்கவெறி தலைவிரித்து ஆடிற்று. இச் சமயத்தில் ஈரோட்டில் சுயமரியாதை மாநாடு நடந்தது. போலீஸ் அடக்கு முறையைக் கண்டித்து விஷய ஆலோசனைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் வந்தது. ஜாதி மத விவகாரங்களில் மட்டும் நம் சுயமரியாதை இயக்கம் சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொண்டால் போதாது; அரசியல் விவகாரங்களிலும் நம் சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று உணர்ச்சித் ததும்ப ஜீவா தீர்மானத்தை ஆதரித்து பேசுகையில் கூறினார்" என்று காணப்படுகிறது.

இந்த செய்தியின் உண்மைத்தன்மை அறிய நாம் குடிஅரசு இதழ்களைத் தான் பார்க்க வேண்டி உள்ளது. ஈரோட்டில் 1930ஆம் ஆண்டு மே மாதம் 10, 11, 12, 13 ஆகிய நாட்களில் இரண்டாவது சுயமரியாதை மகா நாடும் அதை அனுசரித்து வாலிபர் மாநாடு, பெண்கள் மாநாடு, மதுவிலக்கு மாநாடு, சங்கீத மகாநாடு ஆகிய ஐந்து மகாநாடுகள் நடந்துள்ளன.

#### ஈரோடு மாநாட்டில் என்ன நடந்தது?

அம்மாநாட்டைக் குறித்து மே மாதம் 18, 25 ஆகிய நாளிட்ட இதழ்களில் 'ஈரோடு மகாநாடு' என்ற தலைப்பில் தலையங்கங்கள் வெளிவந்திருக்கின்றன. அவற்றுள் மே18ஆம் நாள் இதழில் மாநாட்டு தீர்மானங்களைப் பற்றி எழுதப்பட்டுள்ளது.

"இந்த மகாநாட்டில் ஒரே ஒரு தீர்மானம் மாத்திரமே விவாதத்திற்கு இடமாகி தள்ளப்பட்டு விட்டது. மற்றொரு தீர்மானம் கேட்டுக் கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்டு விட்டது. அதாவது திரு.காந்தியின் உப்புச் சட்ட வீரர்களை ஆதரித்து, அதனால் துன்பமுற்றவர்களுக்கு அனுதாபம் காட்டி சர்க்காரைக் கண்டனம் செய்வது; மற்றொன்று திரு காந்தியாரின் உப்பு சட்டமறுப்பு சத்தியாகிரகம் ஆகியவற்றில் நம்பிக்கை இல்லை என்று கண்டனம் செய்வது.

பிந்தியதைக் கொண்டு வந்த நண்பர் கேட்டுக்கொண்டதன் பேரில் நிறுத்திக் கொண்டார். முந்தியதைக் கொண்டு வந்த நண்பர் பிரேரேபித்ததில் அக்ராசனர் (தலைவர்) அரசியல் (அதாவது பொலிட்டிக்கல்) விஷயத்தை சம்பந்தப்படுத்திக் கொள்ளக் கூடாது என்ற நிபந்தனை உள்ள இந்த மகாநாட்டில் இந்த விஷயம் கொண்டு வருவது நியாயமாகாது என்ற காரணம் சொல்லி தள்ளப்பட்டு விட்டது. அவைகளைத் தவிர வேறு எல்லா வித தீர்மானமும் அனேகமாய் ஏக மனதாகவே நிறைவேறிற்று" என்ற செய்தியே வெளியாகி உள்ளது. ஆக ஜீவாவால் அப்படிப்பட்ட வீர உரை எதுவும் ஈரோடு மாநாட்டு விஷய ஆலோசனை கமிட்டியில் ஆற்றப்பட வில்லை என்பதையே இது தெளிவுபடுத்துகிறது.

இதுகுறித்து ஜீவா தனது 'ஈரோட்டுப் பாதை சரியா' என்ற நூலில் "உப்பு சத்தியாகிரக காலத்தில் நாடு முழுவதும் பல இடங்களிலும் குறிப்பாக தமிழ்நாட்டில் சென்னையிலும் வேதாரண்யத்திலும் அடக்குமுறை பேயாட்டம் ஆடியது. ஈரோடு மகாநாட்டில் அரசாங்கத்தின் அடக்கு முறையைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்ற சில இளைஞர்கள் முயன்றனர். இந்த தீர்மானம் விஷய ஆலோசனைக் கமிட்டிக்கு வந்த பொழுது கமிட்டிக்குத் தலைமை வகித்த ஆர். கே.சண்முகம் சுயமரியாதை இயக்கம் அரசியலில் கலக்கலாமா கூடாதா என்று முடிவு கட்டிய பின்னர்தான் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும் என்றார், உடனே ஈ.வெ.ரா சுயமரியாதை இயக்கத்தில் அரசியல் கலக்கக்கூடாது. யார் எவ்வளவு தூற்றினாலும் சரி, போற்றினாலும் சரி சட்ட மறுப்பை ஆதரிக்கக் கூடாது. தனித்த சமூக இயக்கமாகவே நடைபெற வேண்டும் என்று அழுத்தமாகக் கூறிவிட்டார். தீர்மானத்திற்கு இடம் கிடைக்கவில்லை" என்று நொந்து கொள்கிறார்

1930 மே மாதத்தில் நடந்த ஈரோடு மாநாட்டில் மட்டும்தான் அவ்வாறு திடீரென சுயமரியாதை இயக்கத்தில் அரசியல் கலக்கக்கூடாது ....... தனித்த சமூக இயக்கமாகவே நடைபெற வேண்டும் என்று திடீரெனக் கூறப்பட்டதா என்பதை நாம் யோசிக்க வேண்டி உள்ளது.

1929 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் செங்கல்பட்டில் நடந்த முதல் சுயமரியாதை மாநாட்டிலே கூட கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானத்தில் "(4) இம் மகா நாடு சமூக மதத்துறைகளிலே மாத்திரம் சீர்திருத்தம் செய்யும் வேலையை மேற்கொண்டு இருந்தாலும், நேரு கமிட்டி அறிக்கையானது நமது இயக்கத்தின் அடிப்படைக்கான கொள்கைக்கு விரோதமாய் இருக்கிறபடியால் அதனைக் கண்டிப்பதுடன், இந்தியாவில் வருங்காலத்து அரசியல் திட்ட அமைப்பில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் என்ற கொள்கையை வற்புறுத்துகிறது" என்று உள்ளதை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்

மேலும் ஈரோடு மாநாட்டுக்கு முன்னதாகவே 23.3.1930 நாளிட்ட குடி அரசு இதழின் ஒன்பதாம் பக்கத்தில் 'ஓர் மறுப்பு' என்ற தலைப்பில் வெளிவந்திருந்த அறிக்கையை நாம் இப்போது காணலாம்.

திரு ஈ.வெ.ராமசாமி அவர்கள் கீழ்க்கண்ட மறுப்பை பத்திரிகைகளுக்குத் தந்தி மூலம் அனுப்பியிருக்கிறார். அதாவது:-

> "20ஆம் தேதி வெளிவந்த சென்னை தினசரி பத்திரிகைகளில் ஆயிரக் கணக்கான சுயமரியாதைச் சங்க அங்கத்தினர்கள் உப்பு வரியை எதிர்த்து சத்தியாகிரகம் செய்யப் போவதாக ஒரு செய்தி வெளிவந்திருப்பதைப் பார்த்தேன். யாராவது தன் சொந்த ஹோதாவிலோ அல்லது வேறு ஹோதாவிலோ உப்பு சட்டத்தை மீறுவதைப் பற்றி எனக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் யாராவது உப்புச் சட்டம் மறுப்பு செய்யத் தொடங்கினால் அம்முயற்சி சுயமரியாதை இயக்கத்தாரால் ஆதரிக்கப்பட்டதாகாது. அவ் இயக்கத்தின் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவர் என்கின்ற முறையில் எனக்காவது ,சுயமரியாதை சங்கத் தலைவருக்காவது அதில் சம்பந்தமே கிடையாது. உப்பு சட்டத்தை மீறுவது என்பதை இது சமயம் நான் வன்மையாக்க் கண்டிக்கிறேன் உப்பு சட்டத்தை மீறுவதனால் சுயமரியாதை இயக்கத்திற்கு எத்தகைய நன்மையும் உண்டாகாது" என்ற ஓர் எச்சரிக்கை அறிக்கையை நாம் காண முடிகிறது.

இரண்டு மாதத்திற்கு முன்னதாகவே இப்படிப்பட்ட ஓர் எச்சரிக்கை அறிக்கை வெளியிடப்பட்டிருந்தும் அதில் கலந்து கொண்டதால் ஏற்பட்ட வன்முறை குறித்து தீர்மானத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாததை எப்படி குறை கூற முடிந்ததோ நாம் அறியோம்!

தோழர் கே.பாலதண்டாயுதம் அவர்களின் 'ஜீவா வாழ்க்கை வரலாற்று' நூலில் ஜீவாவின் மற்றுமோர் வீரச் செயலை பற்றி பதிவு செய்திருக்கிறார்.

கதர் பொருளாதாரம் அல்லது கதரைப் பற்றிய மூடநம்பிக்கை ( Supetition of Khadi) என்ற நூலை வெளியிட்ட திரு. எஸ். ராமநாதன் "கைராட்டினத்தை அடிப்படையாகக் கொண்ட கதர் பொருளாதாரம் வளர்ச்சிக்கு வித்திடாது; மாறாக பின்னோக்கியே இழுக்கும். தற்கொலை செய்து கொள்வது அல்லது பிச்சை எடுப்பது என்பவற்றைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில் வேண்டுமானால் கதர்த் தொழிலை ஒரு மாற்றுத் தொழிலாக கொள்ள முடியும்" என்ற தீர்மானத்தை விருதுநகர் சுயமரியாதை மகாநாட்டில் பிரேரேபித்துக் கடுமையான விவாதம் நடந்தது.

மாநாட்டுப் பிரதிநிதிகளில் மிகப் பெரும்பான்மையர் இதே கருத்தைப் பிரதிபலித்தனர். வெள்ளத்தில் எதிர்நீச்சல் போடுவது போல் தீர்மானத்தை எதிர்த்து ஜீவா முழங்கினார். தேசிய கௌரவத்தை உயர்த்தி பிடிக்கும் சின்னம் கதர் என்று அவர் வாதாடினார். கதர் பொருளாதரத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மையை விளக்கமாகவும், விரிவாகவும் எடுத்துச் சொன்னார். இவர் வாதத் திறனைக் கண்டு புகழாதவர்கள் கிடையாது. பெரும்பான்மையான ஆதரவைப் பெறாவிடினும் ஜீவாவின் கருத்தில் ஆழம் இருக்கிறது என்ற அளவுக்கு அங்கீகாரம் பெற்றார். இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்" என்று அவரது வாழ்க்கை வரலாற்று நூல் கூறுகிறது. எங்கெங்கு தொடர்ந்து நட்த்தினார் என்ற விவரம் அதில் தரப்படவில்லை. உண்மையில் அம் மாநாட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் என்ன என்பதைப் பார்ப்போம்.

"பொருளாதாரத் துறைக்கும் தொழிலில் அபிவிருத்திக்கும் இயந்திர வளர்ச்சிக்கும் சமதர்ம உணர்ச்சிக்கும் தத்துவம் விரோதமாய் இருப்பதால் கதர் தேசிய பொருளாதார தொழில் திட்டம் என்பதை இம்மாநாடு **மறுக்கின்றதுடன் தொழில்துறை இயந்திர வளர்ச்சியை இம்மாநாடு ஆதரிக்கின்றது" என்பதுதான் அந்த 7ஆவது தீர்மானம்.**

## நீதித்துறையில் சமூகநீதி திமுக எம்.பி தனிநபர் மசோதா!

இந்தியாவில் உள்ள நீதிபதிகள் குறித்த விவரம் நாடாளுமன்றத்தில் சமீபத்தில் தெரிவிக்கப்பட்டது. அதில் உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றங்களில் சுமார் 80% நீதிபதிகள் முன்னேறிய ஜாதிகளைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். வெறும் 20% மட்டுமே எஸ்சி/எஸ்டி/ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 முதல் ஜனவரி 2026 வரையிலான காலகட்டத்தில் இந்திய நீதிமன்றங்களில் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் குறித்து திமுக எம்பி வில்சன் ராஜ்யசபாவில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கேள்வி எழுப்பி இருந்தார். அதற்கு நாடாளுமன்ற விவகாரங்கள் துறைக்கான மத்திய இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) அர்ஜுன் ராம் மேக்வால் எழுத்துப்பூர்வமாகப் பதிலளித்தார். அதில் இந்திய உயர் நீதிமன்றங்களில் 2021 முதல் ஜனவரி 2026 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 593 நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் பட்டியல் ஜாதிகளைச் சேர்ந்தவர்களில் 26 பேர், பழங்குடியினர் பிரிவில் இருந்து 14 பேர் மட்டுமே நியமிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பிற்படுத்தப்பட்ட பிரிவில் இருந்தும் 80 பேரும் நியமிக்கப்பட்டதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திமுக எம்பி பி. வில்சன் எழுப்பிய கேள்விக்கு, அர்ஜுன் ராம் மேக்வால் ராஜ்யசபாவில் அளித்த எழுத்துப்பூர்வமாகப் பதிலில் மேலும், "2021 ஜனவரி 1 முதல் 2026 ஜனவரி 30 வரை நியமிக்கப்பட்ட 593 நீதிபதிகளில், 26 பேர் எஸ்.சி. பிரிவினர், 14 பேர் எஸ்.டி. பிரிவினர், 80 பேர் ஓ.பி.சி. பிரிவினர், 37 பேர் சிறுபான்மையினர் ஆவர். அதே காலகட்டத்தில், 96 பெண்கள் உயர் நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டனர்.நீதிபதிகள் நியமனத்திற்கான நடைமுறை ஒப்பந்தத்தின்படி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்திற்கான பரிந்துரைகளை அளிக்கும் பொறுப்பு இந்தியத் தலைமை நீதிபதியிடமும், உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனப் பரிந்துரைகளை அளிக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதிகளிடமும் உள்ளது என்றும் அவர் தனது பதிலில் தெரிவித்தார்.

அவர் மேலும், "நீதித் துறையில் சமூகப் பன்முகத்தன்மையை மேம்படுத்த அரசு உறுதிபூண்டுள்ளது என்றும் பதிலளித்தார். உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்திற்கான பரிந்துரைகளை அனுப்பும்போது, பன்முகத்தன்மை இல்லாதது அதிர்ச்சி அளிப்பதாகக் கூறிய பி. வில்சன், இது கவலைக்குரிய போக்கு எனக் குறிப்பிட்டார். அவர் மேலும், "அரசியலமைப்பின் 76வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம். ஆனால், நமது இந்தியாவின் பன்மைத்துவச் சமூகத்தை நீதித்துறை பிரதிபலிக்கவில்லை. உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களில் சில சமூகங்கள் குறைவான பிரதிநிதித்துவத்துடன் உள்ளன. உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனச் செயல்முறைகளில் பாகுபாடு உள்ளது" என்றார். உயர் நீதிமன்ற நீதிபதிகளில் 4.38% மட்டுமே எஸ்.சி. பிரிவைச் சேர்ந்தவர்களாக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும், எஸ்.டி. பிரிவில் இருந்து வெறும் 2.36% பேரும், ஓ.பி.சி. பிரிவில் இருந்து 13.49% மட்டுமே இருப்பதாக அவர் தெரிவித்தார். அதேநேரம் 79.76% நீதிபதிகள் முன்னேறிய ஜாதியினராகவே இருப்பதாகவும் வில்சன் குறிப்பிட்டார்.

**தமிழ்நாட்டில் மட்டுமே அதிகம் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களைத் தவிர மாவட்ட மற்றும் இதர நீதிமன்ற நீதிபதிகள் குறித்த விவரங்களும் வெளியாகியுள்ளது. அதில் தமிழகத்தில் மட்டுமே பன்முகத்தன்மை போதியளவில் இருக்கிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 1234 நீதிபதிகள் இருக்கும் சூழலில், அதில் எஸ்சி/எஸ்டி/ஓபிசி பிரிவில் இருந்து மொத்தம் 1205 நீதிபதிகள் உள்ளனர். அதாவது மொத்த நீதிபதிகளில் 97.65% எஸ்சி/எஸ்டி/ஓபிசி பிரிவில் இருந்து உள்ளனர்.** ஒப்பீட்டிற்குச் சொல்ல வேண்டும் என்றால் உத்தரப் பிரதேசத்தில் மொத்தம் 2640 நீதிபதிகள் உள்ள நிலையில், அதில் 1414 மட்டுமே எஸ்சி/எஸ்டி/ஓபிசி பிரிவைச் சேர்ந்தவர்கள். அதாவது 53% மட்டுமே எஸ்சி/எஸ்டி/ஓபிசி பிரிவினர். அதேபோல மகாராஷ்டிராவில் மொத்தம் 1940 நீதிபதிகள் உள்ள நிலையில், அதில் 734 பேர் மட்டுமே எஸ்சி/எஸ்டி/ஓபிசி. அதாவது 37% மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது.

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# மேட்டூர், திருப்பூரில் ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணிப்பை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்!



கண்டன ஆர்ப்பாட்டம் மேட்டூரில் 12.02.2026 மாலை 5.00 மணியளவில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் நடைபெற்றது. திமுக சேலம் நாடாளுமன்ற உறுப்பினர், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் செல்வகணபதி தலைமை ஏற்றுக் கண்டன உரை நிகழ்த்தினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ரத்தினவேல் (காங்கிரஸ் கட்சியின் சேலம் மேற்கு மாவட்டத் தலைவர்), மெய்யழகன் (விசிக சேலம்மேற்கு மாவட்டச் செயலாளர்) ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள். கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**திருப்பூர்:** 12-02-2026 மாலை 4.30 மணி அளவில் பெரியார் சிலை அருகில் ஒன்றிய அரசைக் கண்டித்து திமுகவின் மத்திய மாவட்டச் செயலாரும் சட்டமன்ற உறுப்பினருமான க.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழமை கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தோழமை இயக்கத் தோழர்கள் மற்றும் முகில்ராசு (திருப்பூர் மாவட்டத் தலைவர்) தமிழகத்திற்கு நிதி மறுத்த ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டன உரை நிகழ்த்தினார்கள்.

தமிழ் அமுதன் (மார்க்சிய முற்போக்காளர் பேரவை), மற்றும் கழகத் தோழர்கள் சங்கீதா (மாவட்ட அமைப்பாளர்), மாதவன் (மாநகரச் செயலாளர்), மாரிமுத்து (மாநகரத் துணைத் தலைவர்), முத்து (மாநகர அமைப்பாளர்), சிரீஜா, இனியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# நிமிர்வோம் வாசகர் வட்ட கருத்தரங்கு







நிமிர்வோம் வாசகர் வட்ட 30-வது சந்திப்பு கழகத் தலைமை அலுவலகத்தில் பிப்-7 சனிக்கிழமை மாலை 6 மணியளவில் ப.அருண் (இளைஞரணி அமைப்பாளர்) தலைமையில் நடைபெற்றது. திராவிட மொழிந்நூல் ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் பிறந்தநாளை ஒட்டி அவரின் படத்தினை திறந்து வைத்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

கரிகாலன் ஊடகவியலாளர் "ஈழத்தடிகளும், மறைமலையடிகளும் பெரியாரை எதிர்த்தார்களா?" என்ற தலைப்பில் பல வரலாற்றுச் செய்திகளையும், பார்ப்பன எதிர்ப்பில் தமிழ்தேசியம் போர்வையில் எப்படி செயல்படுவது என்பதையும் சைவ-வைணவ முரண்பாடுகள் என பல்வேறு செய்திகளை பகிர்ந்து கொண்டார். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் "காந்தியடிகள் படுகொலை ஏன் இன்றும் பேசுபொருள்" என்ற தலைப்பில் காந்தியின் கொலை எப்படி நிகழ்ந்தது, கொலைக்கு பிறகு பெரியார் அகில இந்திய வானொலியில் பேசியது, காந்தியின் இறப்பை இன்றும் கொண்டாடும் ஆர்.எஸ்.எஸ் அமைப்புகள் என பல செய்திகளை பகிர்ந்து கொண்டார்.

சேத்துப்பட்டு பகுதியை சேர்ந்த தோழர் தமிழ் குமரன் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இரா.உமாபதி (சென்னை மாவட்டச் செயலாளர்) மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, சு.கோபிநாத் (திருவல்லிக்கேணி பகுதித் தலைவர்), பேரன்பு (சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்), குடியரசு, வடசென்னை தோழர்கள்

தினகரன், ஏசுகுமார், அருள்தாஸ், ராஜேந்திரன் மற்றும் திருவல்லிக்கேணி தோழர்கள் லீலா, தேன்மொழி, யாழினி, குமார், பிரவீன், மனோஜ், அஜித், அருண், காவை.இளவரசன், சுகந்தன், தாமரை, ஊடகவியலாளர்கள் பிரகாசு, எழிலரசன் மற்றும் புருஷோத்தமன் செய்தியாளர் பிரசாந்த் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# புதுவையில் சீமானை தோலுரித்த பெண்கள்

பெரியார் சிந்தனையாளர் இயக்கம் சார்பில் பெண் உரிமைப் போராளி என்ற தலைப்பில் கருத்தரங்கம் புதுச்சேரி பெரியார் படிப்பகம் ராஜா நகரில் 25.01.2026 அன்று மாலை 6 மணிக்கு தோழர். ஆனந்தி ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.




மக்கள் கலை இலக்கிய கழகத் தோழர் லதா, விடுதலை கலைக்குழு மணிமேகலை, திராவிட மகிழ்நன் ஆகியோர் பெண்ணிய பகுத்தறிவு பாடல்களை பாடினார்கள். இளவரசி சங்கர் ( பகுத்தறிவு எழுத்தாளர் மன்றம்), காயத்திரி ஸ்ரீகாந்த் (திமுக -புதுச்சேரி), அ.அனுசுயா (விசிக) ஆகியோர் கருத்துரையாற்றினர்.

கழகத் தோழர் இரண்யா சீமானின் கேலவமான அரசியலையும், நாதகாவின் பெண்கள் மீதான தாக்குதலும், தமிழ்த்தேசியம் எனும் பெயரில் தன்னுடைய சுயலாபத்திற்காக பெண்களைக் கேவலப்படுத்தும் சீமானை தோலுரிக்கும் விதமாக பல்வேறு தகவல்களை பகிர்ந்து கொண்டார். மேடை பேச்சு முழுக்க தோழமை இயக்க முற்போக்கு பெண் தோழர்களே கருத்துரையாற்றினர். கருத்தரங்கத்தில் பெரியார் போராட்டத்தின் விளைவால் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளது பற்றிய உணர்வுபூர்வமான பல்வேறு செய்திகளை பெண் தோழர்கள் பகிர்ந்து கொண்டனர். கருத்தரங்கத்தில் இரா.உமாபதி (மாவட்டச் செயலாளர்), கடலூர் தோழர் சிவா,கோபி (திருவல்லிக்கேணி பகுதி தலைவர்) த.நா சூர்யா ( திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர்), மற்றும் உதயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அருள்மொழி–கோபிநாதன் ஜாதிமறுப்பு இணையேற்பு விழா!



சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராஜ் - கீதா இணையரின் மகள் அருள்மொழி அவர்களுக்கும் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, மஞ்சள்பட்டணம் பகுதியை சார்ந்த மோகன்தாஸ் - சுதா இணையரின் மகன் கோபிநாதன் அவர்களுக்கும் ஜாதி மறுப்புத் திருமணம் 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11 மணி அளவில் சேலம் மாவட்டம், மேட்டூர் பகுதியில் உள்ள அரசப்பா திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

டி.கே.ஆர் இசைக்குழுவினரின் பறை இசை நிகழ்த்தப்பட்டது. சிற்பி ராசன் மந்திரமா? தந்திரமா? அறிவியல் விளக்க நிகழ்ச்சி மூலமாக சமூகத்தில் கடவுள் பெயரில் நடக்கும் மூடநம்பிக்கைகளை செய்து காட்டினார்.

சூரிய குமார் (சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் ) வரவேற்புரையாற்றினார். குமரப்பா (மேட்டூர் நகரச் செயலாளர்), கா.மாரியப்பன் ( ஆசிரியர் ஓய்வு) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கழகப் பொருளாளர் துரைசாமி, அமைப்புச் செயலாளர் ரத்தினசாமி, சமூக வலைத்தளப் பொருப்பாளர் பரிமள ராசன், வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவசாமி, மேனாள் சட்டமன்ற உறுப்பினர் அ. தமிழரசு, மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கோபால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி மற்றும் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் அவர்களும் வாழ்க்கையில் சந்தோசமாக வாழ்வதற்கு நல்ல சுயசிந்தனையே தேவையே தவிர சடங்கு, சம்பிரதாயங்களோ அல்ல எனவும், தாங்கள் சம்பாதிக்கும் சிறிய பங்கு பொதுவாழ்விற்கு கொடுத்து சமூக முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் என ஜாதி மறுப்பு இணையர்களிடம் கூறி வாழ்த்துரையாற்றினர். பால்.பிரபாகரன் நிகழ்வை ஒருங்கிணைத்து வாழ்த்துரையாற்றினார்.

கழகத் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் அவர்களுக்கு அம்பேத்கர் தொகுப்பு நூல்கள் அன்பளிப்பாக வழங்கினார் தோழர் கோவிந்தராஜ்.

**சேலம் மாவட்டக் கழகம் சார்பில் தோழர்கள் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராஜ், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், நங்கவள்ளி கிருஷ்ணன், பிரபாகரன் ஆகியோர் இணைந்து ரூ.40,000 பெரியார் முழக்க சந்தா வழங்கினர்.**

**நாமக்கல் மாவட்டக் கழகம் சார்பில் சாமிநாதன் மற்றும் தோழர்கள் இணைந்து ரூ.19,300 பெரியார் முழக்க சந்தா மற்றும் முகவரிகளை வழங்கினர்.**

**ஈரோடு தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் ரத்தினசாமி ரூ.10,000 பெரியார் முழக்கம் சந்தா தொகையை வழங்கினார்.**

**கழகத் தோழர் அருள்மொழி - கோபிநாதன் (ஜாதி மறுப்பு இணையர்கள்) கழக வளர்ச்சி நிதியாக ரூ.25,000 கழகத் தலைவரிடம் வழங்கினர்.**

தோழர் தேன்மொழி நன்றி கூறினார். தமிழ்நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான கழகத் தோழர்கள் மற்றும் சேலம் மாவட்டத்தைச் சார்ந்த தோழமை இயக்க, திமுக தோழர்கள் பலர் பங்கேற்றனர்.

# கழகக் குடும்பங்கள் கூடி மகிழ்ந்த மணவிழா

பெரியாரியலை கொள்கையாகவும் வாழ்க்கை நெறியாகவும் ஏற்று தீவிரமாக களப்பணியாற்றி வரும் தோழர் மேட்டூர் கோவிந்தராஜ், திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து தந்தை பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து களப்பணி ஆற்றி வருபவர். மேட்டூர் பகுதித் தோழர்களை ஒருங்கிணைத்து செயல்படுவதோடு டி.கே.ஆர் இசைக்குழுவையும் கழகப் பரப்புரைக்காக நடத்தி வருகிறார். சிறந்த பாடகர்; தனது இரண்டு மகள்களுக்கும் அவர்கள் தேர்வு செய்த இணையர்களுக்கு ஜாதி மறுப்பு திருமணங்களை நடத்தி வைத்திருக்கிறார். இந்த ஜாதி மறுப்பு திருமண அறிமுக விழாவில் பேசிய தோழர்கள் அனைவரும் தோழர் மேட்டூர் கோவிந்தராஜ் அவர்களுடைய செயல்பாடுகளை சுட்டிக்காட்டி பாராட்டினார்கள்.

வழமையான திருமண மண்டபங்களில் மங்கள வாத்தியமாக நாதஸ்வரம் வாசிக்கப்படும். இந்த திருமண மேடையில் பறை இசை ஒலித்தது. சடங்கு திருமணங்களின் மேடையில் கடவுள் படங்கள் மாட்டப்பட்டிருக்கும், இந்த மேடையில் பெரியார், அம்பேத்கர் படங்கள் அழகு செய்தன. புரோகிதர்களின் அர்ச்சனை கூச்சல்கள் இல்லாமல் பகுத்தறிவையும் அறிவியலையும் விளக்கும் மூடநம்பிக்கை நிகழ்ச்சி நடந்தது. கழகத்தின் தோழர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்தனர். கருஞ்சட்டை குடும்பங்கள் மகிழ்ச்சியாக கொண்டாடிய திருவிழாவாக இந்த அறிமுக விழா நடந்தது. காலை மதியம் உணவுகள் அசைவம்தான். விருந்தினர்களுக்கு பெரியார் சுயமரியாதை திருமணம் குறித்த நூல் அன்பளிப்பாக வழங்கபபடடது.

**- நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted :February 20, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran